1993 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இது கொள்கைப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 542, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

542—

செங்கம் உரிமையியல் நீதிமன்றம்

*11315-ஏ—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கம் வட்ட உரிமையியல் நீதிமன்றத்தைத் திருவண்ணாமலையிலிருந்து செங்கத்திற்கு மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இச்செயற்குறிப்பு குறித்து உயர்நீதிமன்றத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டமானது, செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு தொகுதி ஆகிய இரண்டு தொகுதிகளை உள்ளடக்கியது. இதன் ஜனத்தொகை 5 இலட்சம் உள்ளது. கிட்டத்தட்ட 75 விழுக்காடு மக்கள் தங்கள் உரிமை வழக்குகளைத் தீர்த்துக்கொள்ள முடியாத அளவில் இருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளாக வழக்குகள் விசாரணைக்கு வராமலேயே இருக்கின்றன. அதுமட்டுமல்ல, நிலுவையில் இருக்கும் வழக்குகள், தாக்கல் செய்யப்படும் வழக்குகள் மூன்றில் இரண்டு பாகம் செங்கம் வட்டத்தில்தான் இருக்கிறது. எனவே, அரசு இதைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கத்தில், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல ஒரு டிஸ்டிரிக்ட்டு முன்சீப் கோர்ட்டு அமைக்க அரசு முடிவு எடுத்திருக்கிறது. அது குறித்து நீதிமன்றம் முழு அங்கீகாரம் அளித்துவிட்டது. என்றாலும் சில தகவல்கள் கேட்டு உயர்நீதிமன்றத்திற்கு தமிழக அரசு எழுதியிருக்கிறது. விரைவில் பதில் வரும். வந்தவுடன் செங்கத்தில் நீதிமன்றம் அமையும்.

[1993 ஏப்ரல் 30

முற்பகல் 10-05

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பரிந்துரைக்கு மிக்க நன்றி. திருவண்ணாமலையில், திருவண்ணாமலை வட்டத்திற்கும், செங்கம் வட்டத்திற்கும் சேர்ந்தார்ப்போல் முதன்மை உரிமையியல் நீதிமன்றமும், கூடுதல் உரிமையியல் நீதிமன்றமும் ஆக இரண்டும் இருக்கின்றன. கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் தான் பெரும்பாலும் செங்கம் வட்டத்திற்குண்டான கேஸ்கள் இருக்கின்றன. ஆகவே அதை மாற்றிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா எனக் கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 543, திரு. என். ஆர். சிவபதி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. கே. பி. ராஜு கேட்கிறார், மாண்புமிகு கல்வியமைச்சர்.

543—

மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம்

* 9324—திரு. என். ஆர். சிவபதி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொருளாதார அடிப்படையில் சாதி வேறுபாடு இன்றி மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது இத்திட்டம் செயல்படும் ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஏற்கனவே பல திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. புதிய திட்டம் ஏதும் தற்போது அரசின் செயற்குறிப்பில் இல்லை.